2019 ஜூலை 16] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–30

(ஆ) பேரவைக் குழுக்களின் பதவிக் காலத்தை ஓராண்டுக்கு நீட்டித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2018–2019 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பெற்ற மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, பேரவை விதிகள் குழு ஆகிய குழுக்களின் பதவிக் காலத்தை நீட்டித்தல் குறித்த தீர்மானத்தை முன்மொழிதல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018–2019 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பெற்ற மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, பேரவை விதிகள் குழு ஆகிய குழுக்கள் எடுத்துக்கொண்ட பணிகள் இன்னமும் முற்றுப்பெறவில்லை. ஆதலால், ஒவ்வொரு நடப்பாண்டின் இறுதியில் மேற்படி குழுக்களின் பதவிக்காலம் முடிவடைய வரையறுக்கும் பேரவை விதிகள் முறையே 195(2), 203(3), 211(3) மற்றும் 256(2) ஆகியவற்றைத் தளர்த்தி, அக்குழுக்களில் தற்போது பணியாற்றுகின்ற உறுப்பினர்களே தொடர்ந்து 2020 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் முடிய பணியாற்ற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, பேரவை விதிகள் குழு ஆகிய குழுக்களின் பதவிக் காலம் 31–3–2020 வரை ஓராண்டுக்கு நீட்டிக்கப்படுகிறது.

2018–2019 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பெற்ற அவை உரிமைக் குழு, சட்ட விதிகள் ஆய்வுக் குழு, அரசு உறுதிமொழிக் குழு, அவைக் குழு, மனுக்கள் குழு, நூலகக் குழு, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு, அலுவல் ஆய்வுக்குழு ஆகிய குழுக்களின் பதவிக்காலத்தை நீட்டித்தல் குறித்த தீர்மானத்தை முன்மொழிதல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2018–2019 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பெற்ற அவை உரிமைக் குழு, சட்ட விதிகள் ஆய்வுக் குழு, அரசு உறுதிமொழிக் குழு, அவைக் குழு, மனுக்கள் குழு, பேரவை நூலகக் குழு, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு, ஆகிய குழுக்கள் எடுத்துக்கொண்ட பணிகள் இன்னமும் முற்றுப்பெறவில்லை. ஆதலால், ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியில் மேற்படி குழுக்களின் பதவிக்காலம் முடிவடைய வரையறுக்கும் பேரவை விதிகள் முறையே 227(2), 239(2), 248(2), 253(2), 261(3), 264(2) மற்றும் 268(iv) ஆகியவற்றைத் தளர்த்தி, அக்குழுக்களில் தற்போது பணியாற்றுகின்ற உறுப்பினர்களே தொடர்ந்து 2020 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரை அக்குழுக்களில் பணியாற்ற வேண்டும். மேலும், பேரவை விதி 231(2)–ஐத் தளர்த்தி அலுவல் ஆய்வுக் குழுவில் தற்போது பணியாற்றிவரும் உறுப்பினர்களே அடுத்த குழு நியமனம் செய்யப்படும் வரை பணியாற்ற வேண்டும்”

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. மேசையைத் தட்டும் ஒலி)

2019 ஜூலை 16] [பேரவைத் தலைவர்]

அவை உரிமைக் குழு, சட்ட விதிகள் ஆய்வுக் குழு, அரசு உறுதிமொழிக் குழு, அவைக் குழு, மனுக்கள் குழு, நூலகக் குழு, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு பேரவை ஆகிய குழுக்களின் பதவிக் காலம் 31–3–2020 வரை ஓராண்டிற்கு நீட்டிக்கப்படுகிறது. அலுவல் ஆய்வுக்குழு உறுப்பினர்கள் தொடர்ந்து பணியாற்றுவார்கள்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் பிற்பகல் 4–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை 2–33 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 4–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் பிற்பகல் 4–30 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.

6. மானியக் கோரிக்கைகள், 2019–2020, விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஞாபகம் வருதே, ஞாபகம் வருதே, ஞாபகம் வருதே, ஞாபகம் வருதே, பொக்கிஷமாக நெஞ்சினில் புதைந்த நினைவுகள் எல்லாம் ஞாபகம் வருதே! (மேசையைத் தட்டும் ஒலி) இதயத்தைத் தொலைத்தது போல கண்களின் ஓரம் கண்ணீர் வருதே, இந்தச் சட்டப் பேரவையில் அம்மாவின் நினைவுகள் ஞாபகம் வருதே! பொக்கிஷமாக நெஞ்சினில் புதைந்த நினைவுகள் எல்லாம் ஞாபகம் வருதே! (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பேரவையில் மட்டும் அல்ல, போயஸ் கார்டனுக்குச் சென்றாலும் அம்மாவின் ஞாபகம்; தலைமைக் கழகம் சென்றாலும் அம்மாவின் ஞாபகம்; ஏன், கழகக் கொடியைப் பார்த்தாலும் அம்மாவின் ஞாபகம்; இரட்டை இலையைப் பார்த்தாலும் அம்மாவின் ஞாபகம்; இரு விரலைப் பார்த்தாலும் அம்மாவின் ஞாபகம்; (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், எங்கள் நாடி நரம்பில்,